செ.வெ.எண்: 39 நாள்:15.12.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் 2017–18 பிசான பருவ பயிர்களுக்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் அனைத்து விவசாயிகள் பங்கு பெற்று பயன்பெற வேண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

—————

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், **2017–2018**ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்(கோடை), மக்காச்சோளம், சோளம், கம்பு, உளுந்து, பாசிப்பயறு, துவரை, நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நடப்பு பருவத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், **658** வருவாய் கிராமங்களுக்கும் 7 குறுவட்டங்களும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், கடன் பெறும் விவசாயிகள், அவர்கள் கடன் பெறும் வங்கிகளில் கட்டாயமாகப் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்யப்படுவர். கடன்பெறா விவசாயிகள், திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனத்தின் (ICICI LOMBARD) அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ, பொது சேவை மையங்கள் (Common Service Centres (CSC) மூலமாகவோ வங்கிகள்/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறாக பிசான பருவத்தில் சாகுபடி செய்யப்படும் அறிவிக்கை பெறப்பட்டுள்ள பயிர்களுக்கு அறிவிக்கை

செய்யப்பட்டுள்ள கிராமங்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எ ண் | பயிர் விபரம் | அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | பயிர் காப்பீட்டு தொகை (ரூ/ஏக்கர்) | விவசாயிகள் பங்களிப்பு தொகை (ரூ/ஏக்கர்) | பீரிமியம் செலுத்த கடைசி நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | நெல்(கோடை) | 91 | 23500 | 353 | 15.02.2018 |
| 2 | மக்காச்சோளம் | 97 | 13590 | 204 | 15.02.2018 |
| 3 | சோளம் | 5 (குறுவட்டம்) | 9150 | 138 | 15.02.2018 |
| 4 | கம்பு | 2 (குறுவட்டம்) | 7550 | 114 | 15.02.2018 |
| 5 | உளுந்து | 259 | 13000 | 195 | 15.02.2018 |
| 6 | பாசிப்பயறு | 86 | 13000 | 195 | 15.02.2018 |
| 7 | துவரை | 17 | 13000 | 195 | 15.02.2018 |
| 8 | நிலக்கடலை | 35 | 16400 | 246 | 15.02.2018 |
| 9 | கரும்பு | 34 | 45000 | 2250 | 31.10.2018 |
| 10 | பருத்தி | 39 | 19800 | 990 | 28.02.2018 |

எனவே விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகை செலுத்தி முன்கூட்டியே பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்தியபின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவை மையங்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இது தொடர்பான விபரங்களுக்கு விவசாயிகள் தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**